விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 26 கார்த்திகை 16 ரபி-அவ். 7 இதழ் 289
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 1-12-84

## பந்தோபஸ்து சட்டவிதிகள் அமுலுக்கு வந்துள்ளன

[கொழும்பு]

தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலியினால் நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் அறிவிக்கப்பட்ட பந்தோபஸ்து சட்டவிதிகள் உடனடியாக அமுலுக்கு வந்துள்ளன என்று தேசிய பந்தோபஸ்து அமைச்சின் செயலாளர் திரு. டி பி ஐ. பி எஸ். சிறிவர்த்தன தெரிவித்தார்.

இதுதொடர்பான விதிகள் தயாரிக்கப்பட்டு, சட்டமாஅதிபரின் அனுமதி பெறப்பட்டுள்ளது.

இதுதொடர்பான வர்த்தமானியில் ஜனாதிபதி கைச்சாத்திட்டுள்ளார்.

### கொழும்பில் ஊரடங்கு

(கொழும்பு)

கொழும்பு மாநகரசபை எல்லைக்குள் நேற்றிரவு 10

[6ம் பக்கம் 3ம் கலம் பார்க்க)

### தமிழ் கைதிகளுக்கு பாதுகாப்பு

[கொழும்பு]

வெலிக்கடைச் சிறைச்சாலையிலுள்ள தமிழ் கைதிகளுக்கு விசேட பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளது

(6ம் பக்கம் 4ம் கலம் பார்க்க)

# முல்லைத்தீவு மாவட்டத்தில் 42 விவசாயிகள் பலி

### பஸ் தீக்கிரை

[யாழ்ப்பாணம்]

வடபிராந்திய போக்குவரத்துச் சபை பஸ் ஒன்று, நேற்று தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

அச்சுவேலி - ராஜ வீதியில் இச்சம்பவம் நடைபெற்றது

(5ம் பக்கம் 4ம் கலம் பார்க்க)

## அரசாங்கம் அறிவிப்பு

(கொழும்பு)

**முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள இரு பண்ணைகள் மீது நேற்று அதிகாலை 4 மணியளவில் வடபகுதி தீவிரவாதிகளினால் நடத்தப்பட்ட தாக்குதலில் 42 குடியேற்ற விவசாயிகள் பலியானதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.**

'டொலர்' பாம்மிலிருந்த 35 குடியேற்ற விவசாயிகளும், 'கென்ற்' பாம்மிலிருந்த 7 குடியேற்ற [illegible] தாக்குதலில் பலியானதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

ஆயுதப் படையினர் மேற்கொண்ட எதிர்த் தாக்குதலில் 20 க்கும் அதிகமான தீவிரவாதிகள் பலியானதாகவும் பலர் காயமடைந்ததாகவும் அரசாங்கம் தெரிவித்துள்ளது.

[illegible] இந்த இடத்திற்கு வவனியாவில் இருந்து இராணுவ, பொலிஸ் ஹெலிகாப்டர்கள் போய்ச் சேர்ந்ததாகவும் பண்ணைகளைத் தாக்கிய ஏனைய தீவிரவாதிகளை ஒழித்துக்கட்டும் நடவடிக்கையில் படைகள் கூட்டாக ஈடுபட்டுள்ளதாகவும் அரசாங்கம் அறிவித்துள்ளது.

தீவிரவாதிகள் தொடர்ந்தும் தாக்குதல் நடத்தி வருவதாக வதந்திகள் பரவியுள்ளன. இந்த வதந்திகள் பொய்யானவையென்றும் அவற்றை நம்ப வேண்டாமென்றும், தீவிர

(6ம் பக்கம் 1ம் கலம் பார்க்க)

## யாழ்ப்பாணக்குடாநாட்டிலிருந்து வெளியேறுமாறு மக்களுக்கு 'லலித்' வேண்டுகோள்

[கொழும்பு]

''யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள பொதுமக்களின் உயிர்ச்சேதங்கள் மேலும் அதிகரிக்காமல் இருப்பதற்காக, குடாநாட்டிலிருந்து மக்களை வெளியேறுமாறு தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு லலித் அத்துலத் முதலி கேட்டுள்ளார்.

தேசிய பந்தோபஸ்து அமைச்சின் நிதி ஒதுக்கீடு தொடர்பான குழுநிலை விவாதத்தின் போது பாராளுமன்றத்தில் உரையாற்றுகையிலேயே அவர்

(6ம் பக்கம் 4ம் கலம் பார்க்க)

## நஷ்டஈடு வழங்கப்படும்

[கொழும்பு]

''தடைசெய்யப்பட்ட கடற்கரைப் பகுதி வலயத்திலிருந்து வெளியேறிச் செல்லும் மக்களுக்கு அரசாங்கம் நஷ்டஈடு வழங்கும் எழுவைதீவு, அனலைதீவு, நயினாதீவு, நெடுந்தீவு, பாலைதவு, இரணைதீவு ஆகிய பகுதிகளிலுள்ள மக்களும் அங்கிருந்து வெளியேறவேண்டிய நிலை ஏற்பட்டால் அரசாங்கம் நஷ்டஈடு வழங்கும் ''

இவ்வாறு பொதுசன கமிட்டிக் குழுத் தலைவர் டாக்டர் விக்கிரமவீரசூரியா நிருபர்கள் மகாநாட்டில் நேற்றுத் தெரிவித்தார்.

(6ம் பக்கம் 5ம் கலம் பார்க்க)

## கொழும்பு சுவரொட்டிகள்: 'சரத்' குற்றச்சாட்டுக்கு மறுப்பு

[கொழும்பு]

கொழும்பில் அண்மையில் ஒட்டப்பட்ட சுவரொட்டிகளுக்கும் பொதுசனத் தொடர்புக் கமிட்டிக்கும் தொடர்பில்லை என்று டாக்டர் விக்கிரம வீரசூரியா நேற்று நடைபெற்ற நிருபர்கள் மகாநாட்டில் தெரிவித்தார்.

### 'சரத்' குற்றச்சாட்டு

இந்தச் சுவரொட்டிகளை பொதுசன தொடர்புக் கமிட்

[6ம் பக்கம் 4ம் கலம் பார்க்க)

### குண்டு வெடிப்புச் சத்தம்

[யாழ் பாணம்]

யாழ் நகரில் நேற்றுப் பிற்பதல் 5 மணியளவில் குண்டு வெடிப்புச் சத்தமொன்றுகேட்டது.

### மூதூரில் இரு இளைஞர்கள் கொலை

[திருகோணமலை]

மூதூரில் இரு இளைஞர்கள் சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளார்கள்.

சிவராசா, மாதவராசா என்ற இளைஞர்களே சுட்டுக்

(6-ம் பக்கம் 3ம் கலம்பார்க்க).

## துப்பாக்கிச் சூட்டுக்கு மீனவர் பலி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் குருநகரில் இருந்து மீன்பிடிக்கச் சென்ற மீனவர் ஒருவர் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானார்

நேற்றுமுன்தினம் இரவு 7-30 மணியளவில் எழுவைதீவுக் கடலில் இச்சம்பவம் இடம் பெற்றது

குணபால (52 வயது) என்பவரே பலியான மீனவராவார்.

இவர் தென்னிலங்கையைச் சேர்ந்தவர் என்றும் 30வருடகாலமாகக் குருநகரில் தங்கியிருந்து மீன்பிடித்துவருபவர்

(6-ம் பக்கம் 3-ம் கலம்பார்கக)

## 'ஈழநாடு' பற்றி அமைச்சர் 'லலித்'

(கொழும்பு)

யாழ்ப்பாணத்திலிருந்து பாதுகாப்புப் படைகளை டிசம்பர் 31ம் திகதிக்கு முன்னர் துரத்தியடித்துவிடுவோம் என்று தீவிரவாதிகள் 'ஈழநாடு' மூலம் அறிவித்திருப்பதாக தென்னிந்தியாவிலிருந்து வெளிவரும் 'இந்து' பத்திரிகையில் செய்தி வெளிவந்திருக்கிறது என்று தேசிய பாதுகாப்பு அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி நேற்றுமுன்தினம் பாராளுமன்றத்தில் கூறினர்.

தீவிரவாதிகள் 'ஈழநாடு' பத்திரிகை மூலம் வெளியிட்டுள்ள தகவலில், யாழ்ப்பாணக் குடாநாட்டிலிருந்து பாதுகாப்புப்படைகளை இன்னும் ஒரு மாதம் இரண்டு நாட்களுக்குள் அதாவது டிசம்பர் 31ம் திகதிக்குள் துரத்தியடித்துவிடுவோம் என அறிவித்திருக்கிறார்கள் என்று 'இந்து' பத்திரிகை செய்தி வெளியிட்டிருக்கிறது என அமைச்சர் கூறினார். [illegible]

### பஸ் கடத்தப்பட்டது

(யாழ்ப்பாணம்)

நேற்றுக் காலை வட்டுக்கோட்டையில் வைத்து இனந்தெரியாத இளைஞர்களினால் வ. போ. ச பஸ் ஒன்று கடத்தப்பட்டது.

இந்தப் பஸ் அராலியில் கைவிடப்பட்டநிலையில் காணப்பட்டது.

சாவகச்சேரியிலும் வ. போ. ச. பஸ் ஒன்று இனந்தெரியாத இளைஞர்களால் கடத்தப்பட்டதாகக் கூறப்பட்டது.


### ரஜீவ் விஜயம் ஒத்திவைப்பு

[சென்னை]

தமிழ்நாட்டிற்கு இம்மாதம் 4-ம் திகதி விஜயம் செய்யவிருந்த இந்தியப் பிரதமர் திரு. ரஜீவ் காந்தி தமது விஜயத்தை [illegible]ள்ளார்.

யூனியன்

தராசுகள் மற்றும் மேடைத்தராசுகள் எடை பார்க்கும் இயந்திரங்கள்.




■ சேவீஸ்
■ திருத்துதல்
■ முத்திரையிடல்

ஆகியவற்றுக்கு தொடர்புகொள்ளவும்:

சாமுவேல் சன்ஸ் அன்ட் கொம்பனி லிமிட்டெட்

கிளைகள்: 1. செம்மணி வீதி, நல்லூர். தொலைபேசி: 22199
206-208, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 22462

906

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## வகுப்புக்கள்

மானிப்பாய் வீதியில் மேல் மாடிவீடு (சகலவசதிகளுடன்' கராஜுடன் வாடகைக்குண்டு விபரங்களுக்கு:- 173 (புதிய இலக்கம்) மானிப்பாய் வீதி யாழ்ப்பாணம். (905)

## WANTED

Wanted Caterer from January 1985. For Jaffna Y. M. C. A. Restaurant. Applications close: 15. 12.1984 Details and application forms: From Secretary, Y. M. C. A. 900

## யாழ்ப்பாணம் அக்கடமி க. பொ த. உயர்தர பரீட்சை ஆகஸ்ட் 1985 மீட்டல் வகுப்புகள்

85ம் ஆண்டு பரீட்சைக்கான மீட்டல் வகுப்புகள் 3-12-84ல் ஆரம்பமாகின்றன. பாடத் திட்டம் முற்றாக மீட்டல் செய்யப்படும். சேர விரும்புவோர் அக்கடமி காரியாலயத்தில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

மேலும் விபரங்கள் தேவையாயின் காரியாலயத்தில் அறிந்துகொள்ளலாம்.

எம்மிடம் பயின்ற மாணவர்களின் பெறுபேறுகள் எமது பயிற்றும் திறமைக்குச் சான்றாகும்.

அதிபர்.

தொலைபேசி எண்: 22617.

376, பிரதான வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

826

## விற்பனைக்கு

ஒருவரின் பாவிப்பிலுள்ள ஹொண்டா SL 70, 86 Sri மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. தொடர்பு Dr. D. றவீந்திரராஜா, 181, ரெம்பிள் றோட், நல்லூர் தொலைபேசி: 23066 (909)

நீர்வேலி அரசகேசரிப்பிள்ளையார் கோவில் ஒழுங்கையில் பாடசாலைகள், கோவில்கள், தபால்கந்தோர் ஆகியவற்றிக் கண்மையில் செய்பயிர்களுடனும், நன்னீர்க் கிணற்றுடனும் 6 பரப்புக்காணி வீட்டுடன் உடனடி விற்பனைக்குண்டு தொடர்பு: A.C. மகேந்திரன், நீர்வேலிவடக்கு, நீர்வேலி. 872

இருபாலை கோண்டாவில் றோட்டில் இருபாலைச் சந்திக்கு அண்மையில் உடையார் வளவு எனப்படும் 14 பரப்புக்காணி வீட்டுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும். V. சிவப்பிரகாசம், பழம் றோட், கோப்பாய். 9?7

## விற்பனைக்கு

யாழ்ப்பாணம் மணிக்கூட்டு ஒழுங்கையில் இல. 11 வீட்டுக்கு முன்னால் இருக்கும் வீடு கட்டுவதற்கு ஏற்ற 1¾ பரப்புக் காணி உடன் விற்பனைக்கு உண்டு. விநாயகர் மில், அம்பனை, தெல்லிப்பளை. 910

பழைய பூங்கா வீதியில் 3¼ பரப்பு காணி வீட்டுடன் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு 615 B, ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள லக்சுமி சேல்ஸ் சென்ரரில் தொடர்பு கொள்ளவும். தொலைபேசி இலக்கம் 24361. (893)

## வாடகைக்கு

மானிப்பாய் தெற்கில் மேதர் ஒழுங்கையில் கல்லூரி, மார்கட் முதலியவற்றிற்கு அண்மையில் சகல வசதிகள் பிரயோசனங்களுடன் கூடிய வீடு வாடகைக்குண்டு விபரங்களுக்கு; இல: 66, பிறவுண் றோட் (கலட்டிசந்தி) யாழ்ப்பாணம். 907

## சம்பளம் இல்லையாம்

(மாவிட்டபுரம்)

காங்கேசன் துறை கல்வி வட்டாரத்தில்பெரும் பாலான பாடசாலைகளின் ஆசிரியர்களுக்கு இன்னமும் சம்பளம் கிடைக்கவில்லை யென புகார் தெரிவிக்கப்படுகிறது.

## "மாதர்குல மாணிக்கம்"

[யாழ்ப்பாணம்]

"இந்தியாவை இமயத்தில் வைத்தபெருமை, மறைந்த பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியைத்தான் சாரும். பெண்கள் குலத்துக்கே மங்காதபுகழை ஈட்டித்தந்தவர் திருமதி இந்திரா.

இவ்வாறு ஏழாலைவடக்கு ஐங்கரன் ஐக்கிய நாணய சங்கத்தின் தலைவி திருமதி சிவமணி குணநாயகம், திருமதி இந்திராகாந்தியின் நினைவு அஞ்சலிக் கூட்டத்துக்கு தலைமைவகித்துப் பேசுகையில் புகழாரம் சூட்டினார்.

ஏழாலை வடக்கு கிராம அபிவிருத்திச்சங்க மண்டபத்தில் இக்கூட்டம் நடைபெற்றது.

"உலகில் ஜனநாயகமும், சோஷலிஸமும் சிறந்துவிளங்க அவர் உழைத்தமையால்தான் அணிசேரா நாடுகளின் தலைவியாக உயர்த்தப்பட்டார் இந்திரா" என்று திரு வி கோபாலசுந்தரம் சொன்னார்.

மற்றும் செல்வி இராஜசுலோஜனா இராசையா, சு சிவகுமாரசர்மா ஆகியோரும் உரை நிகழ்த்தினர். அன்னை இந்திராவின் ஆத்ம சாந்திக்காக இருநிமிட மௌனம் அனுஷ்டிக்கப்பட்டது.

## நினைவஞ்சலி



செல்வன்

சி. குழந்தைவேலு

காங்கேசன் சீமெந்து தொழிற்சாலை ஊழியர்

தோற்றம் 31 3-1959

மறைவு 1-11-1984

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பெற்றோர் உறவினர். (915)


# கே. ஜீஸ் இன்ஸ்ரியூட்

I.A.A. I.A.B. FOUNDATION INTER FINAL

CHARTERED (PRELIM)

ஆரம்பம்: 9-12 1984

பணிப்பாளர்,

கே. ஜீஸ் இன்ஸ்ரியூட்,

(இலங்கை வங்கி முன்பாக)

ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம். (913)



# கவர்ச்சிகரமான

- கலண்டர்கள்
- டயறிகள்
- நத்தார் புதுவருட வாழ்த்து மடல்கள்

நத்தார் புதுவருடத்தை முன்னிட்டு சகலவிதமான உணவுப் பொருட்கள், பரிசுப்பொருட்கள் என்பவற்றை எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

இன்றே விஜயம் செய்யுங்கள்.

SHOBA AGENCIES Ltd.

194, K. K. S. ROAD,

CHUNNAKAM.



தரமான

வீடியோ

படப்பிடிப்பிற்கு

சித்ராலயா


# திருமண அழைப்பு

| மணமகன்: | மணமகள்: |
|---|---|
| செல்வன் | செல்வி |
| திருச்செல்வம் (நூலகர், பத்திரிகை எழுத்தாளர்) | சாந்தாதேவி |
| இடம்: | காலம்: |
| மணமகள் இல்லம் | 3-12-1984 திங்கட்கிழமை |

நேரம்: மு. ப 10—12 மணிவரை

வரவேற்பு உபசாரம்

3-12-84 பி. ப. 3 மணிக்கு மணமகன் இல்லம்.

தங்கள் நல்வரவை நாடும்

| | |
|---|---|
| திருமதி | திருமதி |
| நாகமணி சுப்பிரமணியம் | நாகமணி செல்வநாயகம் |
| வராத்துப்பளை, | வரணன், |
| பருத்தித்துறை. | அச்சுவேலி |

916


கொழும்பு மாநகரில், தனது தலைமையகத்தைக் கொண்டுள்ள

# MERCANTILE TOURS (CEYLON) LTD

நிறுவனத்தார் யாழ்ப்பாண மக்களின் நலன் கருதி, யாழ்ப்பாணத்திலும் தமது கிளை நிறுவனத்தைத் திறந்து சேவையாற்றுகின்றனர்.

உலகின் எப்பாகத்திற்கும் எந்த விமான சேவை மூலமும் மிகக்குறைந்த கட்டணத்தில் பயணச் சீட்டையும் பயணிகள் காசோலைகளையும் பெற்றுக்கொள்ள நாடுங்கள்.

சகல விமான டிக்கட்டுகளின் பிரதம முகவர்கள்

பயணக் காசோலை வழங்குபவர்கள்

- சவூதி அரேபியன் ஏயர் லைன்ஸ் (Saudia)
- ட்ரான்ஸ் வேர்ல்ட் ஏயர் லைன்ஸ் (Twa)
- மலேஷியன் ஏயர் லைன்ஸ் சிஸ்டம் (Mas)
- எத்தியோப்பியன் ஏயர் லைன்ஸ்

நொடிப்பொழுதில் சிறந்த சேவை

MERCS

MERCANTILE TOURS (CEYLON) LIMITED

No. 11/8, Stanley Road.

Jaffna. PHONE 22321

மேர்க்கன்டைல்

ட்ருவர்ஸ் (சிலோன்) லிமிட்.

மே/பா மேர்க்கன்டைல் கிறெடிட் லிமிட்.

11/8, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

போன்: 22321



# Home Finance Ltd.

யாழ். நகர மக்களுக்கு ஹோம் பினன்ஸ் லிமிட்டட்டின் மற்றும் ஓர் புதிய சேவை.

நவீன முறையில் உங்கள் இல்லங்களை அலங்கரிக்க அழகான, உறுதியான FIBRE GLASS வீட்டுத் தளபாடங்களையும்,

- சாப்பாட்டு மேசை கதிரைகள்,
- T. V. மேசை,
- தண்ணீர்த் தாங்கி,
- WASH BASIN,
- TEAPOYS,
- CENTRE TABLE,
- VERANDAH CHAIRS

என்பவற்றை ஒருங்கே பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்,

TRADE CENTRE,

ஹோம் பினன்ஸ் லிமிட்.,

155, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணி வாக்கு

மரணம் நேரும் என்று அச்சம் காட்டி என்னை எந்தத் தவறும் செய்யும்படி எவருமே செய்ய முடியாது. அப்படித் தவறு செய்வதைவிட சாவதையே நான் விரும்புகிறேன்.

—சோக்கிரட்டிஸ்

# நமது நோக்கு

## இந்தியாவின் 8-வது பொதுத்தேர்தல்: நேர்மையைப் பேணும் நடவடிக்கைகள்

உலகின் மிகப் பெரிய ஜனநாயகமாகிய இந்தியா ஏழு பொதுத் தேர்தல்களை செவ்வனே நடத்தி முடித்தது உலக சாதனையெனலாம்.

நெடுங்காலம் ஆண்ட காங்கிரஸ் கட்சியை ஒருகால் தோற்கடித்ததும் ஜனநாயகத்தின் உயிர்த் துடிப்பை நிரூபிக்கின்றது.

ஜவஹர்லால், இந்திரா போன்ற அகில இந்திய தலைவர்கள் நாட்டில் இதுவரையும் உருவாகாததால் எதிர்க் கட்சியின் பலம் இன்றும் குன்றியிருப்பது கண்கூடு.

இதற்காக நேருவையோ இந்திராவையோ சர்வாதிகாரப் போக்குடையவர்கள், மக்களை அடக்கி ஆண்டவர்களென்று குறை கூறுவது நியாயமாகாது; மக்களால் விரும்பித் தெரிந்தெடுக்கப்பட்ட தலைவர்கள். மக்கள் வெறுப்பைத்தேடிய இந்திரா ஒருமுறை தூக்கி வீசப்பட்டார், எதிர்க்கட்சி ஆட்சிக்கு வர சந்தர்ப்பம் ஏற்பட்டது, இரண்டு வருடங்களுக்கு மேல் அது நிலைக்கவில்லை

இன்னொரு விசித்திரமான கண்டனம் எமது கவனத்துக்கு எட்டியது. 37 வருட சுதந்திரத்தைக் கண்ட நாட்டின் ஆளுங்கட்சி- இந்திரா காங்கிரஸ் - தனது பிரதமரைக் கொலையிலிருந்து பாதுகாக்க முடியவில்லையே, எனவே அக்கட்சிக்கு ஆளும் திறன் ஏது? 'நன்று' என்கிறோம், இந்திய வாக்காளருக்கு இது சமர்ப்பணம்.

'மகாத்மா காந்தியைப் பாதுகாக்கமுடியாத இந்தியாவுக்கு என்ன சுதந்திரம்' என்று அன்று உயிர் வாழ்ந்த, இந்திய சுதந்திரத்தை எதிர்த்த முன்னை நாள் பிரிட்டிஷ் பிரதமர் தானும் இவ்வாறு கூறவில்லை.

இன்று மேற்கில் சிலநாடுகளில் இந்தியாவின் வளர்ச்சி பற்றியோ அதன் ஜனநாயக உறுதிப்பாடு பற்றியோ அனுதாபம் கொள்பவர்கள் ஆட்சி நடத்தவில்லை; அதன் அரசியல் ஸ்திரத்தை விரும்பாதவர் பலர்.

காரணங்கள் எவையாயினும், மேனாட்டு ஏகாதிபத்திய சக்திகளின் உணர்வை வெளிப்படுத்தும் சஞ்சிகைகளில் இந்தியா பற்றியும் இந்திராவின் ஆட்சி பற்றியும் இன்று காணப்படும் விமர்சனங்கள் இதற்குச் சான்றாகும்.

இந்தப் பின்னணியில் இச்சக்திகளுக்கு ஆதரவளிக்கும் சமூக விரோதிகள் இந்தியாவில் இல்லையென்று நம்ப முடியுமா? இந்த எச்சரிக்கையை காலஞ்சென்ற பிரதமர் இந்திரா காந்தி அடிக்கடி விடுத்துவந்தார்.

இன்று நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தல் இந்தச் சூழ்நிலையை ஒரு பெருஞ்சவாலாகக் கொள்ள வேண்டும்.

1971-ல் நடந்த பொதுத் தேர்தலில் பிரதமர் இந்திராவே தேர்தல் சட்ட நெறிக்கு மாறாக நடந்தவரென்று கீழ்க்கோட்டில் குற்றவாளியாகக் காணப்பட்டதை நினைவில் வைத்திருப்பது நல்லது.

தேர்தல் காலத்தில் ஆளுங்கட்சிக்கு வாக்காளர்களை வசப்படுத்த பல நேர்மையற்ற வசதிகள் உண்டு. அவற்றைப்பயன்படுத்தி ஆட்சியைச் கைப்பற்றுவது ஜனநாயகமாகாது.

தேர்தல்கமிஷன் அரசின் கட்டுப்பாட்டுக்கு அடிபணியாது தனது சட்டதிட்டங்களை நீதியாக செயற்படுத்துவது அவசியம்.

மத்திய ஆட்சியிலும், மாநில ஆட்சியிலும் அதிகாரம் செலுத்தும் கட்சிகளுக்கு தேர்தல் கமிஷன் தெளிவான இறுக்கமான நெறிமுறைகளை வழங்கியிருக்கின்றது.

அடிப்படைக்கோட்பாடு என்ன? எல்லாக்கட்சிகளும் தங்கள் பிரசாரத்தை சமநிலையில் நடத்த வேண்டும். ஆளுங்கட்சி இதனை மீற பலவழிகள் உண்டு. அதற்குப் பலியாகாது இருப்பது அவசியம். 'பொதுமக்கள் முறையீடு'என்றொருசட்டம் உண்டு; அதுதக்க முறையில் செயற்படுமென்பது சந்தேகம்.

எனவே கட்சிகள், வேட்பாளர்கள் அவர்கள் பிரசார ஆதரவாளர்கள் ஜனநாயக அடிப்படைப் பண்பில் அபிமானம் இல்லாதிருந்தால் எந்தச் சட்டமும் அது விதிக்கும் தண்டனையும் வலிமையற்றுப் போகும்.

சட்ட நிர்ப்பந்தம் இல்லாது தாமாகவே நிதானமான, நேர்மையான போக்கைக் கடைப்பிடிக்க முன்வரவேண்டும்; இதில் ஆளும் கடசிக்கு அதிக பங்குண்டு.

கொள்கைகள், வேலைத் திட்டங்கள் பற்றி கண்டனங்கள் விமர்சனங்கள் தர்க்கரீதியில் தாராளமாக அள்ளிவீசலாம்.

வேட்பாளர்களின் தனிப்பட்ட வாழ்க்கை பற்றிய கண்டனம் அவருடைய பொதுச்சேவையுடன் தொடர்பற்ற வசைபாடல் தேர்தலின் கற்பைக் கெடுத்துவிடுமென்பது அவசியமாக உணரப்படவேண்டும்.

சுருங்கச் சொல்லில் ஒரு நடுநிலைமையான சூழ்நிலை பொதுமக்கள் மத்தியில் உருவாகமுடியுமானால் இந்திய ஜனநாயகம் உலகுக்கே வழிகாட்டியாகும்.

தீய சக்திகள் பாரதத்தின் பழம்பெரும் பண்பைக் குலைக்கக் காத்திக்கும் வேளையில் ஒருபுனிதமான தேர்தல் நடத்திமுடிப்பதே நாட்டிற்குப் பெருவெற்றியாகும்.

### மதிப்பீடு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி, கைதடி, நுணுவில் பகுதிகளில் சேதமாக்கப்பட்ட வீடுகளை சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் திரு. கே துரைராஜா பார்வையிட்டார்.

சேதமாக்கப்பட்ட வீடுகளுக்குரிய நஷ்டங்களையும் மதிப்பீடு செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாகவும் தெரியவந்துள்ளது.

## உலக மேடை

சிங்கப்பூர்

25 வருடங்களாக சிங்கப்பூரைத்திறம்பட ஆண்டுவந்த பிரதமர் முதற்பிரதமர், ஒரே ஒருபிரதமர் லீ குவான் யூ இன்று 61 வயதுடையவர். அவருடைய கட்சித்துணைவர்கள் பலரும் வயதடைந்தவர்கள்.

இன்று நல்லநிலையிருக்கும் சிங்கப்பூர், தொடர்ந்து முன்னேறுவதாக பிரதமர் லீ தமது மகனை டிசம்பரில் வரும் பொதுத்தேர்தலில் நிறுத்துவாரெனப் பேசப்படுகிறது. மகன், ராணுவதளபதி லீசியன் லூங்சயபதவியை ராஜிநாமாச் செய்ததற்கும்அதுவேகாரணம், பிரதமர் லீயின் மக்கள் செயற்கட்சி (பீ. ஏ. பீ)க்கு அதிகம் எதிர்ப்பிருக்கமாட்டாது.

சிங்கப்பூர் வாசிகள் அரசியலில், அரசியல்திருத்தத்தில் அக்கறை உடையவர்கள் அல்ல; இன்று எதிர்க்கட்சியாகிய ஜனநாயக்ககட்சியில் ஒரு அங்கத்தவர் உண்டு; சுக வாழ்வே அவர்களுக்குமுக்கியம்.

ஜனதிபதி ஆட்சிமுறை வந்தால் பிரதமர் லீ ஜனாதிபதியாக நீடிக்கஇடமுண்டு.

அமெரிக்கா

சர்வதேச பயங்கரவாதம் பற்றி முரண்பட்ட கருத்துக்கள் அடிபடுகின்றன. ராஜாங்க அமைச்சர் பயங்கரவாதத்தை ஒழிக்க நாட்டிலும், வெளியிலும் மிகதீவிர நடவடிக்கைகளை கோருகிறார்.

உபஜனாதிபதி புஷ் நடவடிக்கைகள் எவையானாலும் பொது மக்கள் பாதுகாக்கப்பட வேண்டு மென்று வற்புறுத்துகிறார்.

வெள்ளைமாளிகை இருவரும் சொல்வது சரியென்றும் நாட்டுக்கெதிரான திட்டவட்டமான பயங்கரச் செயல்களை இனங்கண்டு அவற்றை அனுமதிக்கும் நாடுகளுக் கெதிராக ராணுவநடவடிக்கை எடுக்க வேண்டுமென விளக்குகிறது. மட்டுப்படுத்துமளவில் பொது மக்கள் கொல்லப்படுவதைத் தடுக்க முடியாதென்றும் கருதுகிறது.

கனடா

வெளிநாட்டிலிருந்து வேலை தேடி வருபவர்களை குறைப்பதில் கனடா 1985-ல் நடவடிக்கை எடுக்கவுள்ளது. இதற்கான கொள்கைமாற்றம் உருவாகிறது. 85,000 தொடக்கம் 90,000 வரை கூட்டத்துக்கமைந்த விண்ணப்பங்கள் செல்லுபடியாகலாம்.

அயர்லாந்து

வட அயர்லாந்தில் புறெட்டெஸ்டாந்து பெரும்பான்மையருக்கும், கத்தோலிக்க சிறுபான்மையருக்கும் நட்புறவு ஏற்படுத்த தகுந்த அரசியல் நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் என்று திருமதி தட்சரைக் கேட்டுக்கொண்டிருக்கிறார்

15 வருடங்களில் 2400பேர் கொலை செய்யப்பட்டிருக்கின்றனர். பிரிட்டிஷ் பிரதமர்

(6ம் பக்கம் 5ம் கலம் பார்க்க)

## "துணிச்சலும் பரிவும்மிக்க உலகத் தலைவர்"

(திருகோணமலை)

அன்னை இந்திராகாந்தி துணிச்சலும் பரிவுமிக்க உலகத்தலைவராக விளங்கினார் என்று திருகோணமலை மேலதிக அரசாங்க அதிபர் திரு ஜி கிருஷ்ணமூர்த்தி அன்னை இந்திரா அஞ்சலிக்கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

திருகோணமலை காந்தி சேவாசங்கம் இந்தஅஞ்சலிக் கூட்டத்தை திருகோணமலை இந்துக்கல்லூரி மண்டபத்தில் நடத்தியது.

சங்கத்தலைவரான தியாகி கோ இராஜகோபால் தலைமை தாங்கிப்பேசுகையில் "54 வருடங்களுக்கு முன்னர் 1931 ஆம் ஆண்டில் அன்னை இந்திரா பதின்மூன்று வயதுச் சிறுமியாய் தந்தை பண்டிட் ஜவஹர்லால் நேரு, தாயார் கமலாதேவியுடன் திருகோணமலைக்கு வருகைதந்ததையும், 20 வயது மாணவனாகதான் அவர்கள் கலந்துகொண்ட நிகழ்ச்சிகளில் பங்குபற்றியதையும் நினைவுகூர்ந்தார்.

பிரபலதமிழ் எழுத்தாளரான திரு. க. அருள்சுபபிரமணியம் பிரபல சட்டத்தரணி அல்ஹாஜ் ஏ. எல். எம் இஸ்மாயில் வட்டாரக்கல்வி அதிகாரி செல்வி செல்வமணி வடிவேலு, சத்யசாயிபாபா சமித்தியைச்சேர்ந்த திரு. துகுலவீரசிங்கம், காந்தி ஆசிரியர் திரு. பொ. கந்தையா ஆகியோரும் பேசினர்.

### திருநெல்வேலி சிவன் ஆலயத்திற்கு புதிய சித்திரத்தேர்

(கொழும்புத்துறை)

திருநெல்வேலி சிவன் ஆலயத்திற்கெனப் புதிய சித்திரத்தேர் ஒன்று உருவாக்கப்பட்டு வருகின்றது. சுமார் இருபது லட்சம் ரூபா செலவில் இச்சித்திரத்தேர் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது.

பிரபல ஈழத்து ஸ்தபதியான ஆறுமுகம் ஜீவரத்தினம் தலைமையிலான சிற்பாசிரியர் குழு இச் சித்திரத்தேரை நிர்மாணித்து வருகின்றது. இச்சித்திரத்தேர் நிர்மாணத்திற்கு உதவுமாறு ஆலயபரிபாலனசபைப் பொருளாளர் டாக்டர் க கந்தசாமி பொது மக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

### ஒத்திவைப்பு

(மானிப்பாய்)

யாழ். சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் சென்ற 2-ம் திகதிதொடக்கம் நான்கு நாட்களுக்கு தொடர்ந்து நடைபெறவிருந்த 1985-ம் வருடம் 4-ம் வகுப்பில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான சேவைக் காலப் பயிற்சி வகுப்பு பின்ஒரு திகதிக்குஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இப் பயிற்சி வகுப்பு இனி எப்போது நடைபெறும் என்பது பற்றிய விபரம் சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர்களுக்கு சில தினங்களில் அறிவிக்கப்படுமென மானிப்பாய் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. [illegible] தெரிவித்தார்.

## -இந்தியத் தேர்தல்கள் - 84-

### 'கை' விளம்பரம் பற்றிய சர்ச்சை

இந்தியாவின் ஒருமைப்பாட்டுக்காக அரசாங்கத்துக்கு 'கை' கொடுங்கள் என்று கட்சி சார்பற்ற வகையில் அரசாங்க விளம்பரம் ஒன்றுஇந்தியாவில் ஒட்டப்படுகிறது. ஆனல் இந்த விளம்பரம்ஆளும் இந்திரா காங்கிரஸ் கட்சியின் மறைமுகமான ஒரு பிரசாரதந்திரம் என்று எதிர்கட்சிகள் தெரிவித்துள்ளன.

இந்த விளம்பரத்தில் 'கை' கொடுக்கவும் என்ற இடத்தில் 'கை' வரையப்பட்டுள்ளது. இந்திரா காங்கிரஸ் கட்சியின் தேர்தல் சின்னம் 'கை' யாகும். எனவே இந்த அரசாங்க விளம்பரம் இந்திராகாங்கிரஸ் சார்பானது என்பதே எதிர்க்கட்சிகளின் குமுறலாகும்.

### பொற்கோயிலுக்கும் தேர்தல்

சீக்கிய பொற்கோயில் மற்றும் இந்திய சீக்கிய குருத்வாராக்களுக்கான நிர்வாகசபைத் தேர்தல் நடத்தப்படவுள்ளது.

இத் தேர்தலில் 5 உயர் சீக்கிய குருமார்களே நிர்வாகிகளாகத் தெரிவாவர் இவர்களே சகல சீக்கிய மத அலுவல்களுக்கும் பொறுப்பாக இருப்பர்.

சீக்கிய இனத்தவர் மத்தியில் இத் தேர்தல் பிரபலமானது. மத அலுவல்களுடன் அவர்களின் அரசியல் விவகாரங்களிலும் இத் தேர்தலில் தெரிவாகும் 5 குருமார்களே செல்வாக்குப் பெற்றிருப்பர்.

தற்போது சிறையில் உள்ள பொற்கோயிலின் பிரதான குரு ரோராவும் இத்தேர்தலில் மீண்டும் குதித்துள்ளார். இவர் பொற்கோயில் முற்றுகையையடுத்து தடுப்புக்காவலிலுள்ளார்.

இவருக்கே செல்வாக்கு அதிகமாக இருப்பதாக கூறப்பட்டது. இத் தேர்தலை சீக்கிய மிதவாதிகளுக்கும் தீவிரவாதிகளுக்குமிடையிலான போட்டியென்றும் கூறப்பட்டது.

### சிவாஜி மீண்டும் இந்திரா காங்கிரஸில்

தமிழ்நாடு இந்திராகாங்கிரஸ்கட்சி பிரமுகரான நடிகர் திரு. சிவ ஜிகணேசன் இந்திராகாங்கிரஸிலிருந்து தாம் செய்துகொண்ட ராஜினமாவை வாபஸ்பெற்றுள்ளார்.

இவர் நேற்று முன்தினம் புதுடில்லியில் பிரதமர் ரஜீவ்காந்தியைச் சந்தித்தார் இதனையடுத்தே தமது வாபஸை அவர் அறிவித்து மீண்டும் இந்திராகாங்கிரஸை ஆதரிக்சப்போவதாககூறினர். இந்திராகாங்கிரஸிலிருந்து விலகி சுயேட்சையாக போட்டியிடவிருந்த தமது ஆதரவாளர்களை மீண்டும் அ. தி. மு க, இந்திரா காங்கிரஸ் கூட்டுக்கு ஆதரவளிக்கும்படியும் அவர் கேட்டுள்ளார்.

### ரஜீவுக்கு வெற்றி நிச்சயம்

உத்தரப்பிரதேசம், மஹாராஷ்டிரா, பீகார், கர்நாடகம் ஆகிய இடங்களில் பத்திரிகை ஒன்று அபிப்பிராய வாக்கெடுப்பு நடத்தியது. இதில் 80 ஆயிரம் வாசகர்கள் கலந்துகொண்டனர்

இவ் வாக்கெடுப்பில் ரஜீவ்காந்திக்கு செல்வாக்கு கூடுதலாக உள்ளது.

அதேவேளை 1980ம் ஆண்டில் இந்திராகாங்கிரஸ் பெற்ற பெரும்பான்மைபலம் இத்தடவை தேர்தலில் இக்கட்சிக்குக் கிடைக்காதென்றும் குறைவான பெரும்பான்மைபலத்துடனேயே இதுஆட்சி அமைக்கமுடியுமென்றும் கூறப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்கப் பொருளாதாரம் பாதிக்கப்பட்டு வருகிறது!

## பாதுகாப்புச்செலவில் றீகன் கைவைப்பார்?

வாஷிங்டன், நவ. 30

அமெரிக்காவின் பொருளாதாரம் பாதிப்படைந்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. இந்த நிலை குறித்து ஜனாதிபதி திரு. றெனால்ட்றீகன் தமது குடியரசுக்கட்சிப் பிரமுகர்களுடன் நேற்றுக் கலந்தாலோசித்தார்.

இந்த பாதிப்புநிலை காரணமாக அமெரிக்கா பல ஆக்கபூர்வமான பொருளியல் திட்டங்களை அமுல்படுத்தவேண்டியநிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

பலசெலவீனங்களில் வெட்டுவிழும் நிலை காணப்படுகிறது. வரிவிதிப்புக்களையும் சமாளிக்க வேண்டியுள்ளது.

அமெரிக்காவின் பாதுகாப்புச் செலவீனங்களிலும் குறைப்பு எதுவும் கொண்டுவரப்படலாமா? என்பதேதற்போதைய பிரதான கேள்வியாகும்.

திரு. றீகன் இச்செலவீனத்தைக் குறைக்கவேண்டிய நிர்ப்பந்தத்துக் குள்ளாகியிருக்கிறார் என்று பலர் கூறுகின்றனர்.

எத்தகையநிலையிலும் அச்செலவீனம் குறைக்கப்படமாட்டாது என மறுதரப்பில் கூறப்பட்டது.

இச்செலவே அமெரிக்காவில் அதிகூடியதாகும். அமெரிக்க இராணுவ தலைமையகமான 'பென்ரகன்' பெருமளவு நிதியை வருடந்தோறும் பெற்றுவருகிறது.

அமெரிக்காவின் இராணுவப் போட்டிநாடான சோவியத் யூனியன் இந்த ஆண்டு வரவு செலவுத்திட்டத்தில் பாதுகாப்புச் செலவுகளை 12 சதவீதமாக உயர்த்தியுள்ளது.

எனவே அமெரிக்கா தனது பாதகமான பொருளாதார நிலையிலும் இந்த உயர்வுக்கு நிகராக நடந்துகொள்ளுமா என்பது றீகனின் நடவடிக்கைகளில் தங்கியுள்ளது.

அமெரிக்கப் பொருளாதாரத்தில் வரிச்சுமைகளே பெரும் பங்குவகிக்கின்றன. கடந்த ஜனாதிபதித் தேர்தலில் திரு. றீகனும், மொன்டேலும் வரிவிதிப்புக்கள் பற்றிய விவகாரத்தையே தமது பிரதான பிரசாரமாகக் கொண்டிருந்தனர்.

இருவரும் வரிச்சுமைகளைக் குறைக்கப்போவதாக உறுதியளித்திருந்தனர். இதனால் றீகன் தனது வாக்குறுதிக்கமைய வரிகளைக் கூட்டி நிலைமையைச் சமாளிக்க முடியாதவராகவுமுள்ளார். (கி)

## சோவியத் 'டாங்கி'பலம்: 'நேட்டோ' கூட்டு எதிர்ப்பலம்!

வாஷிங்டன், நவ. 30

சோவியத் யூனியன் இராணுவ 'டாங்கி'ப் படைகள் உட்பட ஏனைய தரைப் படை கனரக வாகனங்களை எதிர்கொள்ள 'நேட்டோ' நாடுகள் புதிய தொழில் நுட்பங்களைக் கையாளவுள்ளன.

இந்த 'நேட்டோ' கூட்டு முயற்சியில் பிரிட்டன், அமெரிக்கா, பிரான்ஸ், மே ஜேர்மனி ஆகியன ஈடுபடவுள்ளது.

சோவியத்தின் இராணுவ வாகனப்படைப் பிரிவு உலகில் மிகப் பலம்வாய்ந்ததாகும். பெருமளவில் அதி நவீன தாக்குதல் முறைகளை அது கொண்டுள்ளது. இதன் தொழில் நுட்பம் மிகவும் உயர்ந்தது.

எனவே சிறந்த தரைப் படை வாகன சக்தியை எதிர்கொள்ளும் நவீன தொழில் நுட்ப எதிர்ப்புச் சக்தியை 'நேட்டோ' உருவாக்கியுள்ளது. இப்புதிய சக்தி விரைவில் வெளிக்கொண்டு வரப்படும் என்று கூறப்பட்டது. (இ)

## தெல்லிப்பழை ப. நோ. கூ. வுக்கு 300 பேர்

(மாவிட்டபுரம்)

தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்க கிராமிய வங்கியிலிருந்து பென்ஷன் பெறுவதற்கு 300 பேர் பதிவு செய்து கொண்டுள்ளனர்.

## அமைதிவேண்டிப் பிரார்த்தனை

(மன்னார்)

நாட்டில் அமைதியும் ஒற்றுமையும் நிலவவேண்டி மன்னார் புனித செபஸ்தியார் ஆலயத்தில் விசேட பிரார்த்தனைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இவ்விசேட பிரார்த்தனைகள் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் நடைபெற்றுவருகின்றன.


★ உங்கள் விலைமதிப்புள்ள டி. வி, வீடியோ,றேடியோ போன்ற எலெக்ரோனிக்ஸ், எலெக்றிக்கல் பொருட்கள் பழுதாகிவிட்டதென்ற கவலையா?

உங்கள் குறைகளை நிவர்த்திசெய்ய இத்துறையில் தேர்ச்சிபெற்ற பொறியியலாளர்களைக் கொண்ட 'ஸ்டார் எலெக்ரோனிக்ஸ்'ஐ நாடுங்கள்

★ ஸ்டார் எலெக்ரோனிக்ஸ்

இல: 37/6, 37/7 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.



UNIQUE COMMUNICATION SERVICE

யுனிக் கொமுயுனிக்கேசன் சேர்விஸ்



நொடிப்பொழுதில் தெளிவான சர்வதேச தொலைபேசி ரெலெக்ஸ் அழைப்புகளுக்கு இன்றே நாடுங்கள் - யுனிக்

24 மணிநேர சேவை

ரெலெக்ஸ் - 22285 PERIMR CE

தொலைபேசி 22789 22891

ரெலெக்ஸ் - 21652, 21742 21918 21931, PERIMP CE

தொலைபேசி:- 22726 547884, 548626, 549065, 549066



# மேர்ச்சன்ட் பினன்ஸ் லிமிட்டெட்

4, 1-ம் மாடி, நவீனசந்தைக் கட்டிடம்,
யாழ்ப்பாணம். தொலைபேசி: 24183

கூட்டிணைக்கப்பட்ட தேதி: 2—05—1979

## நிலையான வைப்புத் திட்டங்கள்

| காலம் | வருட வட்டி விகிதம் | |
|---|---|---|
| | மாதாந்த வட்டி கொடுத்தல் | காலமுடிவில் வட்டி கொடுத்தல் |
| 6 மாத வைப்பு | — | 18% |
| 1 வருட வைப்பு | 20% | 22% |
| 2 வருட வைப்பு | 22% | 24% |

### பிரதான தொழில் வகைகள்

★ வியாபாரப் பொருட்களின் பொறுப்பில் கடன் வழங்கல்.
★ வங்கி, மறுதாபனக் கடன் ஒழுங்கு செய்தல்.
★ வர்த்தக வாகனங்கள் (லொறி), உழவு யந்திரங்கள் (ட்ராக்டர்), மினி பஸ் முதலியனவற்றிற்கு வாடகைக் கொள்வனவுக்குக் கடன் கொடுத்தல்.
★ இடைக்கால கடன் கொடுத்தல்.

### நிதி நிலைமை

| | 31-3-82ல் முடிந்த வருடத்துக்கு | 31-3-83ல் முடிந்த வருடத்துக்கு | 31-3 84ல் முடிந்த வருடத்திற்கு |
|---|---|---|---|
| | ரூ. 000 | ரூ. 000 | ரூ. 000 |
| பங்கு மூலதனம் ... | 100, | 100, | 100, |
| ஒதுக்கிய நிதி ... | 300, | 560, | 1010, |
| நிலையான கடன் முறிகள் ... | 597, | 597, | 597, |
| வைப்புக்கள் ... | 6,615, | 10,157, | 12,400, |
| பெற்ற கடன்கள் ... | — | — | — |
| வரிக்குமுன் லாபம் ... | 191, | 639, | 1,131, |
| வரிக்குபின் லாபம் ... | 191, | 319, | 651, |
| வழங்கப்பட்ட பங்கு லாபவீதம் ... | 30% | 30% | — |
| வழங்கப்படவிருக்கும் பங்கு லாபவீதம் ... | — | — | 30% |

★ இவ்வாண்டிற்குரிய கணக்கு எண்பார்வை செய்யப்படுகிறது.

### இயக்குனர் சபை

A. சோமசுந்தரம்பிள்ளை B. A., F. C. A. தலைவர், முகாமைத்துவ இயக்குனர்.
S. மகேந்திரன் B. Sc. (Cey.) இயக்குனர்—கடன் வசதிகள்
K. நடராசா B. Sc. Bar-at-Law, Attorney-at-Law
C. மகேசன் Attorney-at-Law
N. [illegible] Retd. S. L. A. S.
V. [illegible] B. Sc. A. M. B. I. M., A. M. I. Prod. E.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய பலன்

மாதம்—கார்த்திகை
திகதி—16(01-12-1984)
வாரம்—சனி
திதி—நவமி முழுநாளும்
நக்ஷத்திரம்—பூரட்டாதி
பின்இரவு 5-20 வரை

மேடம்:- சகோதரவழியால் மனதில் சஞ்சலம் தோன்றக் கூடும் வீட்டிலும் அமைதி குன்றும் உஷாராகஇருக்கவும்.

இடபம்:- விளை பொருள் விருத்தியுடன் விருந்துக்கும் இடமுண்டு தாய்வழி தனமும் தாராளமாகக் கிடைக்கும்.

மிதுனம்:- செய்தொழிலால் சிறப்புக் கிடைக்கும் வழக்கு விவகாரங்களில் வெற்றியுண்டு நீண்டநாள் பிரச்னை இன்று நல்ல முடிவுக்கு வரும்.

கடகம்:- சிந்தையில் தடுமாற்றம் ஏற்படும் செய்தொழிலால் நஷ்டம் ஏற்படலாம் புதிய முதலீடுகளை இன்று தவிர்த்தல் நன்று.

சிங்கம்:- சந்திப்பின்மூலம் பயனுள்ள தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வீர்கள் களஸ்திரவழியாலும் மகிச்சிக்கு இடமுண்டு.

கன்னி:- நம்பிக்கை மோசடி நடக்கும் நண்பர்களும் காலை வாரிவிடுவர் தீர்க்கமான சிந்தனையே சிறட்பைத் தரும்.

துலாம்:- பிறருக்கு உதவுவதில் முன்நிற்பீர்கள் இதன் மூலம் பணமும் செலவாகும் அரசியல் வாதிகளுக்கு இன்று அதிர்ஷ்ட தினம்.

விருச்சிகம்:- கற்றதன் பயன் இன்று கைமேல் கிடைக்கும் அறிஞர்கள் போற்றுவர் ஆதரவுபெருகும்.

தனுசு:- மனம்போல் வாழ்வு இன்று மலரும் கடமையாற்றுமிடத்தில் ஒத்துழைப்புக்கிடைக்கலாம் முன்னேற்ற மான தினம்.

மகரம்:- வியாபாரத்துறையில் விருத்திக்கு இடமுண்டு செய்தொழில் சிறப்படையும் வாழ்க்கையில் சுமுகமானநிலை தென்படும்.

கும்பம்:- பலவழிகளிலும் பணவரவுக்கு இடமுண்டு பிள்ளைகள் மூலம் பெருமை தரும் சம்பவம் ஒன்றும் நடைபெறும் உடல்நலத்தைப் பேணவும்.

மீனம்:- பேச்சுவன்மையால் பெருமைக்கு இடமுண்டு இனபந்துக்கள் உங்களை உற்சாகப் படுத்துவர்

திருமலை
வே. ரவீந்திரன்

**ராஜா** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-00
சிவாஜி - லக்ஷ்மி
**ராஜராஜசோழன்**
(கலர்)

**ராணி** (யாழ்ப்பாணம்
10-30, 2-00,
FUTURE WOMAN
(கண்டிப்பாக
(வயது வந்தவர்களுக்கு)

**ஹரன்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-00,
எஸ். எஸ். ஆர்.
விஜயகுமாரி
மு. கருணநிதியின்
**பூமாலை**

**ஸ்ரீதர்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30,
கமலஹாசன், ஸ்ரீதேவி,
**தாயில்லாமல் நானில்லை**
(ஈஸ்ட்மன் கலர்)

**றீகல்** [யாழ் நகர்]
10-30, 2 15,
SHARKY'S MACHINE
(Action-Packed Thrill)
**றீகல் மினி**
10-15, 2-00,
தியாகராஜன்-பானுசந்தர்
அர்ச்சனு-பாலுமகேந்திரன்
**நீங்கள் கேட்டவை**

**சாந்தி** (யாழ்நகர்)
10-30, 2-30,
Brooke Shields
Christopher Atkins
"THE BLUE LAGOON"
கப்பல் விபத்தில் தப்பி ஒரு தீவில் கரைசேர்ந்து வளர்ந்த இரு சிறுர்களின் காதல் காவியம்.
கண்டிப்பாக வயதுவந்தவர் கட்கு மட்டும்.

**லிடோ** சினிமா
தினசரி 10 30, 2-00
MISSION BATANGAS
(War Film - Action packed)

**வெலிங்டன்**
(யாழ். நகர்)
10-30, 2-00, P. M.
ஜெய்சங்கர்
**துணிவே துணை**

**மனோகரா** (யாழ்நகர்)
தினசரி 10-30, 2-30,
2வது கொட்டகை நிரம்பிய வாரமாக யாழ் நகரில் என்றுமே இல்லாதளவு மாதர்கள் பெருந்திரளாக பார்த்து மகிழ்ந்து கொண்டிருக்கும் ஓர் திரைப்படம் தான்
K. பாலச்சந்தரின்
**பூவிலங்கு**
[கலர்]
ஏமாற்ற மடையாமல் இன்றே பார்த்துமகிழுங்கள்

## சுகாதாரப்பகுதி ஊழியருக்கும்
# சம்பளம் காசோலை!

(மாவிட்டபுரம்)

சுகாதாரப்பகுதி ஊழியர்களுக்கும் இம்மாதசம்பளம் காசோலையாகவே வழங்கப்பட உள்ளது.

இதுசம்பந்தமான சுற்றுநிருபம் ஒன்று யாழ். மாவட்ட சுகாதார பகுதியினரால் யாழ். மாவட்டத்திலுள்ள சுகாதாரப்பகுதி ஊழியர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

நவம்பர் மாதசம்பளத்தை சுகாதாரப்பகுதி ஊழியர்களுக்கும் காசோலைகளாக வழங்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும், ஊழியர்கள் தமக்கிருக்கும் வங்கிக்கணக்கு தொடர்பான விபரங்களை அனுப்பி வைக்கவேண்டுமெனவும் அதில் கோரப்பட்டுள்ளது.

## நிரந்தர நியமனம் பெற்ற அரச அதிபர்

(சுண்டிக்குளி)

இம்மாதம் முதல் யாழ்ப்பாண அரசாங்க அதிபராக நிரந்தர நியமனம் பெற்றுள்ள திரு. எம். பஞ்சலிங்கம் 1957ம் ஆண்டு தொடக்கம் 1968ம் ஆண்டு வரை மாவட்ட காணி அதிகாரியாக கடமையாற்றியுள்ளார். 1976ம் ஆண்டுயாழ். செயலக உதவி அரசாங்க அதிபராகப் பதவியேற்ற இவர் 79-ம் ஆண்டு டிசம்பர் மாதம் தொடக்கம் மேலதிக அரசாங்க அதிபராகப் பதவி உயர்வுபெற்ருர். முன்னைய யாழ்ப்பாண அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையா வெளிநாடு சென்ற பின்னர் பதில் அரசாங்க அதிபராகவும், யாழ். மாவட்ட அமைச்சின் செயலாளராகவும் கடமையாற்றியுள்ளார்.

## இடமாற்றம்

[மன்னூர்]

மன்னூர் உதவி பங்குத் தந்தையாக கடந்த ஒருவருட காலம் சேவையாற்றிய அருட்திரு கிருபானந்தன் இம்மாதம் முதல் யாழ் மறைமாவட்டத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். [கி]

## இன்று

[வண்ணூர்பண்ணை]

யாழ்ப்பாண மாவட்ட சனசமூக நிலையங்களின் சமாசத்தின் விசேட நிர்வாகசபைக் கூட்டம் இன்று காலை 9 மணிக்கு நடைபெறவிருக்கிறது.

சமாசத் தலைவர் திரு. எஸ். எம். தவராசா தலைமையில் நடைபெறவிருக்கும் இக்கூட்டம் யாழ். ஆரியகுளம் சன்மார்க்க சன சமூக நிலையக் கட்டிடத்தில் நடைபெறவிருக்கிறது.

## இன்ஸ்பெக்டர் சுகுணேந்திரன் கல்கத்தா பயணம்

[மன்னூர்]

மன்னூர் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. பொன் சுகுணேந்திரன் புலமைப் பரிசில் பெற்று பொலிஸ் பயிற்சி பெறுவதற்காக கடந்த வெள்ளிக் கிழமை கல்கத்தாவுக்குப் பயணமானூர்.

இவர் நாடு திரும்பும்வரை மன்னூர் பொலிஸ்நிலைய குற்றத் தடுப்பு பிரிவு இன்ஸ்பெக்டர் திரு. பி. திருச்செல்வம் பதில் பொலிஸ்நிலைய பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றுவார். (கி)

## பொன். பரமானந்த ம. வித்தியாலயம்

(குரும்பசிட்டி)

குரும்பசிட்டி பொன் பரமானந்த மகா வித்தியாலய பாடசாலை அபிவிருத்திச் சங்க பொதுக் கூட்டம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை இரண்டாம் திகதி நடைபெறும்.

# முல்லைத்தீவு மாவட்டத்தில் பட்டாசு வெடிக்கத் தடை!

[முல்லைத்தீவு]

முல்லைத்தீவு மாவட்டத்தில் திருமண வைபவம், வீடு குடிபுகுதல், மரணச் சடங்கு ஆகியவற்றில் பட்டாஸ் வெடிப்பது தடைசெய்யப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட இணைப்பு அதிகாரி லெப்டினன்ட் கேர்ணல் ரி. பரணகம முல்லைத்தீவு அரசாங்க அதிபர் திரு. கே. ஞானச்சந்திரனுக்கு இதுபற்றி அறிவித்ததைத் தொடர்ந்து, மேற்கண்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது முல்லைத்தீவு அரசங்க அதிபர், சகல கிராம சேவையாளர்களுக்கும் இது தொடர்பாக அறிவித்திருப்பதாகக் கூறப்படுகிறது.

பொதுமக்களுக்கும், பட்டாஸ் வெடி விற்பனையாளர்களுக்கும், வர்த்தக நிலையங்களுக்கும் இது பற்றி அறிவிக்குமாறு கிராம சேவையாளர்களுக்குப் பணிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு நிலைமைகுறித்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுதுள்ளதாகக் கூறப்படுகிறது. (க)

## மங்கி எரியும் மின் குமிழ்கள்

(சுண்டிக்குளி)

ஆனைக்கோட்டையில் இருந்து நவாலிக்குச் செல்லும் பிரதான வீதியில் அடிக்கடி மின்சாரம் தடைப்படுவதும் வீதிகளில் பொருத்தப்பட்டுள்ள மின் குமிழ்கள் மங்கிய நிலையில் எரிவதுமாய் உள்ளன. இதனுல் இப் பகுதி பிரதான வீதிகள் குண்டும் குழியுமாக இருப்பதாலும் மழைகாலம் ஆரம்பமாகியுள்ளதாலும் மக்கள் இருட்டில் பிரயாணம் செய்வது மிகவும் கஷ்டமாகவுள்ளது. எனவே இது விடயத்தில் மின்சாரப் பகுதியினர் உடன் நடவடிக்கை எடுத்து ஆவன செய்ய வேண்டுமென்று இப்பகுதி மக்கள் கேட்கின்றுர்கள்.

## ரூபவாஹினி

மாலை

| | |
|---|---|
| 5-30 | 'நியூ ஸ்பைடர் மேன், கார்ட்டூர்ன் சித்திரம் (ஆங்கிலம்) |
| 5-55 | சிறுவர் நிகழ்ச்சி (சிங்களம் |
| 6-15 | தொல்கால ஆராய்ச்சி (ஆங்கிலம்) |
| 6-55 | செய்திகள் (தமிழ்) |
| 7-15 | 'பக்ரேஜர்ஸ், (ஆங்கிலம்) |
| 8-15 | செய்திகள் (சிங்களம்) |
| 8-35 | 'லாஹிரு தஹசக்'- நாடகம் (சிங்களம்) |
| 9-05 | இசை நிகழ்ச்சி (சிங்களம்) |
| 9-30 | செய்திகள் (ஆங்கிலம்) |
| 10-00 | 'ஸ்டார்ஸ் கி அன்ட் ஹச், (ஆங்கிலம் |
| 10-30 | உலகச் செய்திகள் |
| 10-35 | 'ஸ்டார்ஸ் கி அன்ட் ஹச்' |
| 10-55 | நிகழ்ச்சிகள் முடிவு. |

**L. P. GAS**

**COLOMBO GAS & WATER COMPANY LTD.**

இன் விற்பனைப் பிரதிநிதிகளாக நாங்கள் நியமிக்கப்பட்டுள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் எமது வாடிக்கையாளர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறோம்.

உங்கள்

**L. P. GAS, Cylinders, Gas cookers**
உதிரிப்பாகங்கள்

யாவற்றையும் கட்டுப்பாட்டு விலையில்
(யாழ்நகர் விலைக்கே)
எம்மிடம் இப்போது பெற்றுக்கொள்ளலாம்.

வீடுகளிலும் விநியோகம் செய்யப்படும்.

SHOBA

**SHOBA AGENCIES LTD.**
194, K. K. S. ROAD, CHUNNAKAM.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'வள்ளங்கள், தோணிகளுக்கு பாதுகாப்புமேற்கொள்ளவும்"

## யாழ். அரச அதிபர் பணிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டக் கரையோரப்பகுதி தடைசெய்யப்பட்ட பிரதேசமாகப் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளதால், கடற்கரையோரமாகக் கட்டப்பட்டிருக்கும் வள்ளங்கள் தோணிகள் முதலியவற்றிற்கு ஏற்ற பாதுகாப்பை அதன் சொந்தக்காரர்கள் உடனடியாக மேற்கொள்ள வேண்டுமென மேலிடம் அறிவித்துள்ளதைத் தொடர்ந்து யாழ். அரசஅதிபர் திரு எம். பஞ்சலிங்கம் கரையோரங்களில் நிறுத்தப்பட்ட தோணிகள், வள்ளங்கள், மீன்பிடி மிதவைகளைப் பாதுகாப்பான இடங்களுக்குத் தரைப் பகுதிக்கு ஒதுக்குமாறு மீன்பிடி உரிமையாளர்களைக் கேட்டுள்ளதுடன், மாவட்ட விஸ்தரிப்பு உத்தியோகத்தருக்கும் இதுபற்றி நடவடிக்கை எடுக்குமாறு பணித்துள்ளார்.

# தனியார் பஸ் சேவை

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்குமிடையேயான தனியார் பஸ் சேவைகளில் சில முறிகண்டிக்கும்-கொழும்புக்குமிடையே சேவையாற்றுவதற்கு முடிவுசெய்துள்ளன.

பிரயாணிகளின் நன்மை கருதி இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக தனியார் பஸ் உரிமையாளர் ஒருவர் தெரிவித்தார். [மா]

# இப்படியும் நடக்கிறது

அ [illegible]

என்ன மொழிஇது? புரியவில்லையா? கீழே தலைகீழாக வந்திருப்பதை படியுங்கள்.

[illegible]

— 'ஊடுருவி'

# யாழ்நகரில்நேற்று..

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாண நகரில் நேற்று தனியார் வர்த்தக நிலையங்கள் திறக்கப்படாததினாலும், தனியார் வாகனங்கள் சேவையில் ஈடுபடாததினாலும் பொதுமக்கள் உணவுப்பொருட்கள்பெறுவதில் பெரும் சிரமத்தை எதிர்நோக்கினார்கள்.

யாழ்.நகரில் ஒரு சில தேநீர்க் கடைகளும், மருந்து விற்பனை நிலையங்களும், சலவைத் தொழிற்சாலைகளும், சிகை அலங்கரிப்பு நிலையங்களும்மட்டுமே திறந்திருந்தன. இக்கடைகளும் நண்பகலுடன் பூட்டப்பட்டுவிட்டன.

வீதிகளில் வ.போ.ச.பஸ்களை மட்டுமே காணமுடிந்தது. மினி பஸ்கள், லொறிகள், டாக்ஸிகள், 'ஓட்டோ'க்கள் எவற்றையும் காணமுடியவில்லை. மோட்டார் சைக்கிள் ஒன்றுகூடக்காணவில்லை.

சைக்கிள்கள் மிகக் குறைவாகவே காணப்பட்டன. மக்கள் நடந்துசென்றுதான் தங்கள் அலுவல்களைக்கவனித்தார்கள்.

பாடசாலை பஸ் சேவை வழமைபோல் நடைபெற்றது நேற்று கல்லூரிகளில் ஒரு பரீட்சை மட்டும் நடைபெற்றபோதிலும் மாணவர்கள் பரீட்சை முடிந்ததும் உடனடியாக வீடுகளுக்குச் செல்லவில்லை. பிற்பகல் 2 மணிக்குப் பின்னரே வீடுகளுக்குச் சென்றனர்.

யாழ். அரசினர் ஆஸ்பத்திரி வெறிச்சோடிக் காணப்பட்டது. வெளி நோயாளர் பகுதியில் மிகக் குறைவான நோயாளர்களே வந்திருந்தனர். 'கிளினிக்குகளிலும்' குறைவான நோயாளிகளே வந்திருந்தனர்.

சில ஆஸ்பத்திரி ஊழியர்கள் நேற்று முன்தினம் வீடுகளுக்குச் செல்லாமல் ஆஸ்பத்திரிகளில் தங்கியிருந்ததாகக் கூறப்படுகிறது.

யாழ். நகரில் சந்தை வழக்கம்போல் கூடவில்லை. வெளியூர் வியாபாரிகள் எவரும் வரவில்லை. (க)

# கலைப்பீட பரீட்சைகள் ஒத்திவைப்பு

[யாழ்ப்பாணம்]

யாழ் பல்கலைக் கழகத்தின் கலைப்பீடப்பரீட்சைகள்யாவும் மறு அறிவித்தல்வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

பதிவாளர் திரு வே. ந. சிவராசா இத்தகவலைத் தெரிவித்தார்.

# ஹெலிக்காப்டரிலிருந்து விழுந்த மரக்குற்றி

(கரவெட்டி)

வானில் பறந்து கொண்டிருந்த ஹெலிக்கொப்டரில் இருந்து விழுந்த பாரிய மரக்குற்றியும் சீனச்சட்டி உலோகப் பொருளொன்றும் வீடொன்றின் கூரையையும் வீட்டிலிருந்த பொருட்களையும் பதம் பார்த்தன.

இச்சம்பவம் நேற்றுமுன்தினம் நண்பகல் அல்வாய் திக்கத்தில் இடம்பெற்றது.

சுமார் 7 அடி நீளமும், ஒரு அடி விட்டமும் கொண்ட இம் மரக்குற்றி நீல வெள்ளை நிறத் தடிப்பான நைம்லான் நூல்களாலான கொழுக்கிகள் கொண்ட வலையினுள்ளும் அதனுடன் உலோகப் பொருளொன்றும் காணப்பட்டது.

இதுவிழுந்ததையடுத்து வீட்டுக்கூரையின் ஒருபகுதி சேதமடைந்ததுடன் வீட்டினுள் இருந்த "ரெலிவிஷன்" 'ஷோக்கேஸ்' என்பன சேதமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மரம் விழுந்த இடத்திற்கு அருகாக வீட்டிற்குள் தொட்டிலில் வளர்த்தப்பட்டிருந்த வீட்டுக்காரர் திரு. க. குணசேகரத்தின் 6 மாதக் குழந்தைக்குத் தெய்வாதீனமாக எதுவும் நடைபெறவில்லை என்றும் கூறப்பட்டது. (மா)

# ஓய்வூதியம் வழங்கப்படவில்லை

[யாழ்ப்பாணம்]

தபால் அலுவலகங்களில் ஓய்வூதியம் பெறுபவர்களில் ஒருபகுதியினருக்கு நேற்று ஓய்வூதியம் வழங்கப்படவில்லை. இதனால் ஓய்வூதியம் பெறவந்தோர் ஏமாற்றத்துடன் திரும்பவேண்டி ஏற்பட்டுள்ளது.

குருநகர் இராணுவமுகாமுக்கு முன்னால் உள்ள கட்டிடத்திலிருக்கும் மக்கள் வங்கிப் பிரிவில் இந்த ஓய்வூதியம் வழங்கப்பட்டுவந்தது.

இம்மாதத்துக்குரிய ஓய்வூதியப் பணம் கடந்த இரு தினங்களாக வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

29ம் திகதி ஒரு பகுதியினருக்கு வழங்கப்பட்டது.

30ம் திகதியான நேற்று வட்டுக்கோட்டை, காரைநகர், அளவெட்டி, புங்குடுதீவு, நயினாதீவு, அனலைதீவு, வயாவிளான் ஆகிய இடங்களில் இருந்து ஒய்வூதியம் பெறுவோர் குருநகருக்கு வந்திருந்தனர்.

நெருக்கடியான இக் காலகட்டத்தில், போக்குவரத்து வசதியற்ற இந்த நேரத்தில் தள்ளாத வயதிலும், நடையாக நடந்துவந்த தங்களுக்கு ஓய்வூதியப்பணம் கிடைக்கவில்லையே என்று கவலையுடன் தெரிவித்தார் ஒரு வயோதிபர். [மா]

# இந். காங்கிரஸ் வேட்பாளர் தெரிவு

[புதுடில்லி]

இந்தியப் பாராளுமன்றத்திற்கு இந்திரா காங்கிரஸ் வேட்பாளர் ஒருவர் போட்டியின்றித் தேர்ந்தெடுக்சப்பட்டுள்ளார்.

# கைது

[மட்டக்களப்பு]

தீவிரவாதத் தலைவர் உமா. மகேஸ்வரனின் சகாவான இளைஞரொருவர் நேற்று மட்டக்களப்பில் கைது செய்யப்பட்டார்

# கி. சேவையாளர் அலுவலகம்

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை வாடிவீடு, ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள இரு கிராமசேவையாளர்களின் அலுவலகமாக இயங்கவுள்ளதாக யாழ் அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம் தெரிவித்தார்.

## முல்லைத்தீவு...

(1-ம் பக்கம்3கலத்தொடர்ச்சி

வாதிகளின் அனுதாபிகளே வேண்டுமென்று இந்த வதந்திகளைப் பரப்புகிறார்கள் என்றும் அரசாங்கம் தெரிவித்துள்ளது.

புனர்வாழ்வுத் திட்டத்தின் கீழ் இப்பண்ணைகளில் குடியமர்த்தப்பட்டவர்களே இத் தாக்குதலில் பலியானதாகவும் கூறப்பட்டது.

கூட்டுப் பந்தோபஸ்துப் படையினர் தற்போது நிலைமையைக் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வந்துள்ளார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

## மூதூரில்...

(1ம்பக்க 1ம்கலத் தொடர்ச்சி)

கொலை செய்யப்பட்டவர்களாவர். கடந்த திங்கள் இரவும், செவ்வாய் இரவும் இந்த இருவரும் சுட்டுக் கொலை செய்யப்பட்டனர்.

சமூக விரோதிகள் என்று இவர்களுக்கு "மரண தண்டனை' விதிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது,

## கொழும்பில்...

(1ம்பக்கம்4ம்கலத்தொடர்ச்சி)

மணிமுதல் இன்று அதிகாலை 4 மணிவரை ஊரடங்குச்சட்டம் அமுல்செய்யப்பட்டது. முன் எச்சரிக்கை நடவடிக்கையாகவே இந்த ஊரடங்குச் சட்டம் அமுல்செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

## துப்பாக்கிச்...

(1ம்பக்கம்3ம்கலத்தொடர்ச்சி]

என்றும், நேற்றுமுன்தினம் இரவு எஸ்.ஜோண்பிள்ளை என்பவருக்குச் சொந்தமான வள்ளம் ஒன்றில் மீன்பிடிக்கச் சென்றபோது கடற்படையினரால் சோதனையிடப்பட்டபின்னர் துப்பாக்கிச் சூட்டுக்கிலக்காகி மரணமானார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இரவு மரணமானவர் சென்ற வள்ளத்துடன் மேலும் 36 வள்ளங்கள் சென்றதாகவும், அவ் வள்ளங்களில் சென்றவர்களும் கடற்படையினரால் பலத்த தாக்குதலுக்குள்ளானதாகவும் பின்னர் மீன்பிடிக்காமலே திரும்பிவிட்டதாகவும் கூறப்படுகிறது.

இறந்தவரின் சடலம் யாழ். ஆஸ்பத்திரிப் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (மா)

## யாழ்ப்பாண ..

(1ம்பக்க 5ம்கலத் தொடர்ச்சி)

இந்த வேண்டுகோளை விடுத்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:-

"யாழ்ப்பாணத்திலுள்ளமக்கள் விடுமுறையைக் கழிப்பதற்காக இலங்கையின் ஏனைய பகுதிகளிலுள்ள அவர்களின் உறவினர்கள், நண்பர்களின் இடங்களுக்குச் செல்லலாம்.

"இதன் மூலம் யார் நிரபராதிகள், யார் நிரபராதிகளற்றவர் என்பது தெரியவரும்" என்றார்.

## தமிழ் கைதி...

(1ம்பக்கம்5ம்கலத்தொடர்ச்சி)

பிரதிப் பொலிஸ் மாஅதிபர் திரு ஆர் சுந்தரலிங்கத்தின் பணிப்பிற்கிணங்கவே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (இ)

## சரத்...

(1ம்பக்கம்2ம்கலத் தொடர்ச்சி)

டிக் குழுவினரே வெளியிட்டதாகக் கலவான எம். பி. திரு. சரத் முத்தெட்டுவேகம பாராளுமன்றத்தில் ராஜாங்க அமைச்சின் நிதி ஒதுக்கீடு தொடர்பான குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையில் தெரிவித்திருந்தார்.

இந்தக் குற்றச்சாட்டை டாக்டர் விக்கிரம வீரசூரியா வன்மையாக மறுத்துள்ளார்.

## பஸ் தீக்கிரை...

(1ம்பக்கம் 5ம்கலத்தொடர்ச்சி)

பிரயாணிகளுடன் சென்ற இப்பஸ்ஸை இனந்தெரியாத கோஷ்டியொன்று துப்பாக்கி முனையில் தடுத்து நிறுத்தி, பிரயாணிகளை இறக்கிவிட்டு பஸ்ஸுக்கு தீ வைத்தனராம்.

பஸ் முற்றாகத் தீக்கிரையானது. [மா-க]

## நஷ்ட ஈடு...

(1ம்பக்கம் 5 கலத் தொடர்ச்சி

## சைக்கிள் தடை

தீவிரவாதிகள் முன்பு சைக்கிள்களில் வந்து பயங்கரவாத நடவடிக்கைகளி லீடுபட்டதினாலேயே சைக்கிள் பாவனைக்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளதாகவும் டாக்டர் விக்கிரம வீரசூரியா தெரிவித்தார்.

## உலகமேடை

(3ம் பக்க 5ம்கலத் தொடர்ச்சி)

ஐ. ஆர் ஏ ஐரிஷ் குடியரசில் பாதுகாப்புப் பெருது தடுக்க வேண்டுமெனக் கேட்கிறார்.

சீனா

"நாட்டின் நன்மைகாக நருகச் செலவு செய்யுங்கள்' சீனாவில் இது ஒரு புரட்சிகரமான கருத்துஎன்று சாதாரண சீனமக்கள் நினைக்கின்றனர் சுகாதார வாழ்வுக்குத் தேவையான, ஆடம்பரமென்று முன்கருதப்பட்ட பொருளாக டெலிவிசன், நவநாகரிகஉடை போன்றவை இன்று தேவையெனக் கொள்ளப்படுகிறது.

பாவனை அதிகரிப்பதனாலேயே உற்பத்தி பெருகுமென்ற புதிய சித்தாந்த கம்மியூனிஸ்ட் சீனாவின் புதிய போக்கு எல்லோரும் செல்வந்தர்களாக வேண்டுமென்று அசாத்தியப்போக்கு சீனாவில் அரும்பியுள்ளது.

'உலகம் சுற்றி'

# மரண அறிவித்தல்

## W. S. அரியதாசன்

சுண்ணாகம் கந்தரோடையைச் சேர்ந்த W. S. அரியதாசன் காலமானார். இவர் காலஞ்சென்ற V. S. சுப்பையா (தபாலதிபர்), செல்லமுத்து அவர்களின் அன்பு மகனும், மேரி யோசெப்பின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற திரு. ஆசீர்வாதம் (புகையிரத அதிபர்) திருமதி ஆசீர்வாதம் ஆகியோரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற சொலமன் இராசரத்தினத்தின் அன்புச் சகோதரரும், ஜெயரட்ணம் (கணக்காளர் - நீர்வேலி Glass Factory), சா. வி. ஜெயரட்ணம், ஜோர்ஜ் தர்மரட்ணம் (Engineer U. K.), விக்ரர் சுகரெட்ணம் (சுண்ணாகம் அபிவிருத்திச்சபை), விமலாதேவி, மேரி பத்மாதேவி, மாகிரட் இந்திரா தேவி, விஜயரட்ணம், எலிசபெத் கமலாதேவி ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜெபசெல்வி (ஆசிரியை - நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி), உமா மகேஸ்வரி (Dr. U. K.), தவராசா (சிமெந்துக் கூட்டுத்தாபனம்), திருஞானரட்ணம் (மீன்பிடிக் கூட்டுத்தாபனம்), கமலாம்பிகை (கமநல சேவை நிலையம் உடுவில்) ஆகியோரின் மாமனாரும், ஜெனி, ஷெரின், பௌத்திரா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார். அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்திற்காக 1-12-84 (இன்று) சனிக்கிழமை காலை 10 மணிக்கு அன்னாரின் இல்லத்திலிருந்து உடுவில் சேமக் காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"Gracelyn"
டாக்டர் சுப்பிரமணியம் வீதி,
கந்தரோடை. 914

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்க அச்சகத்தில் 1984ம் ஆண்டு டிசம்பர் மாதம் 1-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post office Sri Lanka under Eelanadu 100236/81 Eelanadu P. O. Box 49, Telegram Telephone number 22389 - 24126.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org